www.tamilarangam.net

## நாட்டை எதிர் நோக்கியுள்ள இன்றைய நெருக்கடிகளுக்கும் அமைதியின்மைக்குமான காரணங்கள் என்ன?

இன்றைய நெருக்கடிகளுக்கான மூல காரணம் என்ன?

இலங்கைக் குடியரசின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் பெற்ற கௌரவ ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களது அரசு மேற்கொண்ட பல நடவடிக்கைகள் பிரச்சினைகளுக்கான மூலவிசையாக இருந்தமையை அவதானிக்க முடியும். சுதந்திர தேசியப் பொருளாதார அடிப்படையை உருவாக்கும் இலக்கை நோக்கி 1970 – 77 காலப்பகுதியில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கவின் தலைமையிலான கூட்டரசாங்கம் செயல்பட்டது. அதனால் தேசிய பொருளாதார வளர்ச்சியானது குறிப்பிடத்தக்க விருத்தியைக் கண்டது. அதேவேளை, கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்த கட்சிகள் பின்னர் சுயவிமர்சனரீதியில் ஒப்புக்கொண்டது போன்ற சில மக்களைப்பாதிக்கும் தவறுகள் காரணமாக மக்கள் மாற்று அரசொன்றை வேண்டிநின்றனர். இதன் பொருள், மக்கள் சுதந்திர தேசியப் பொருளாதார அமைப்பை நிராகரித்தனர் என்பதல்ல. ஆயினும் அவ்வாறே பொருள்கொண்டு, 1977இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசு சுதந்திர தேசியப் பொருளாதாரக் கொள்கையை நிராகரித்துவிட்டு திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் பல்தேசியக் கம்பனிகளுக்கு தங்குதடையின்றி நாட்டின் கதவுகளை திறந்துவிட்டது. அதன் மூலம் பல்தேசியக் கம்பனிகளின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதிக்கமும், சுரண்டலும் நமது மக்களின் மீது சுமத்தப்பட்டது. நாட்டின் கடன் பளு பிரமிக்கத்தக்க வகையில் வளர்ந்தது. மக்கள் பல் வேறுவழிகளில் தாங்கமுடியாத சுமைகளை சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்நிலையில் மக்கள் மத்தியில் அதிருப்தி உணர்வு அதிகரிக்கத்தொடங்கின. இவ்வுணர்வுகள் விரைவான எதிர்ப்பாக மாறுவதைத் தடுப்பதற்காக அரசு அவசர அவசரமாகவே மக்கள் விரோத — ஜனநாயக விரோத — தொழிற்சங்கவிரோதச் சட்டங்களை நிறைவேற்றி ஆயுதப்படைகளைப் பாவித்து இராணுவநடவடிக்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்தது. இதனால், மக்கள் ஏற்கனவே பெற்றிருந்த அடிப்படை மனித உரிமைகள், பலவருடங்களினான ஜனநாயக, தொழிற்சங்க உரிமைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பறிக்கப்பட்டு வந்தன. இத்தகைய ஒரு போக்குடன் ஒரு பிரதான வெளிப்பாடாக வளர்ந்துவந்த இனப்பிரச் சினைக்கு பேச்சுவார்த்தைகளுடான நியாயமான அரசியல் தீர்வொன்றைக் காணும் சந்தர்ப்பங்களை உதாசீனம் செய்துவிட்டு இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளை சிங்கள மக்களுக்கு ஆதரவான செயல்களாகக் காட்டும் முயற்சிகளும், இனவாத வன்செயல் கள் மூலம் பிரதான பிரச்சினைகளைத் திசைதிருப்பும் தவறான செயற்பாடு களும் இடம்பெற்றன.

இத்தகைய அடக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியிலிருந்து வெடித்தெழுந்த ஆயுதப்போராட்டத்தை 'பயங்கரவாதம்' எனக்கூறி அதற்கெதிரான இராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்ப ட்டதன்மூலம் மனித உரிமைமீறல்களும் இனஒடுக்கலும் விரிந்து பரந்த செயல்களாக உருவெடுத்தன. ஒரு இனத்திற்கு எதிரான அடக் குமுறையானது விரைவாகத் தனது சொந்த இனத்திற்கு எதிரான அடக்குமுறையாக மாற்றம் பெற்ற சூழலை இன்று நாம் எல்லோ ரும் காணமுடிகிறது.

<u>ஜனதா விமுக்தி பெரமுனையை (J.V.P.) மக்கள் ஏன் ஆதரிக்கிறார்கள்?</u>

இவ்விதம் நாடுமுழுமையும் அனுபவித்த கொடிய அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கு எதிராகப் பாராளுமன்றத்திற்கு வெளியே எத்தகைய வெகுஜனப்போராட்டங்களும் முன்னெடுக்கப்ப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டாதவாறு பல்வேறு வழிகளில் தடைமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சர்வாதிகார காலத்தில் வெகுஜனங்களை அணிதிரட்டவும் சட்டத்திற்கு உட்பட்ட இயக்கங்களை நடத்தவும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவிற்கு இருந்த ஜனநாயக உரிமைகளின் சிறுதுளியைத்தானும் [illegible] ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசு எதிர்க்கட்சிகளுக்கு வழங்கவில்லை. அடக்குமுறைகள் அதிகரித்த அதேவேளை பாராளுமன்ற எதிர்க்கட்சிகள் யாவும் எவ்வித வெகுஜனப் போராட்டங்களையும், குறைந்தளவு சட்டத்திற்குட்பட்டவையுங்கூட முன்னெடுக்க முயலவில்லை. இத்தகைய நிலையிலேயே ஜே.வி.பி. யின் செயற்பாடுகள் முனைப்புப்பெற ஆரம்பித்தன.

ஜே.வி.பி. யின் வளர்ச்சி தொடங்கிய போதே அது தடைசெய்யப்பட்டது. ஒரு நாட்டின், ஒரு இனத்தின், ஒரு பிரதேசத்தின், ஒரு கிராமத்தின் அல்லது ஒரு கட்சியின் ஜனநாயக உரிமை பறிக்கப்படும் போது எதிர்விளைவுகளும் பாரதூரமானதாயமைவது தவிர்க்கவியலாத நியதியாகும். இத்தகைய நிலையிலேயே எதிர்க்குழுக்களும் உருவெடுக்கின்றன. அவற்றை ஆயுதமுனையில் அடக்க முயலும்போது அடக்குமுறைக்கு எதிரான ஆயுதப்போராட்டமும் வெடிக்கின்றது. ஜே.வி.பி. யின் ஆயுதப்போராட்டம் உருவெடுத்த சூழ்நிலையும் இத்தகையதேயாகும்.

மாட்சிமைதங்கிய ஜனாதிபதியாகிய நீங்கள், அண்மையில் ஜே.வி.பி. யின் தடையை நீக்கும்படி அதன் தலைவர் றோகண விஜயவீர அவர்கள் 1983 இல் அன்றைய ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தை வெளியிட்டிருந்தீர்கள். அன்றைய அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையே இன்றைய வன்முறைக்கு வழிகோலியது என்பதையும் அக்கடிதத்தை வெளியிட்ட போது குறிப்பிட்டிருந்தீர்கள். இன்றைய மோசமான நெருக்கடிக்கான காரணத்தை இதிலிருந்து நாமெல்லோரும் புரிந்துகொள்ள முடியும். ஜே.வி.பி. யின் போராட்ட வடிவங்கள் சிலவற்றை நாம் ஏற்காத போதிலும், அவர்களது தத்துவார்த்த அரசியல் மார்க்கத்தில் நாம் வேறுபாடு கொண்டிருந்த போதிலும் அவர்கள் இன்றைய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட காரணங்களைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புரிந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்த விரும்புகின்றோம்.

## தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனை என்ன?

## எவ்வாறு தீர்வுகாண்பது?

நாட்டின் இன்றைய நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கும் ஒவ்வொரு கட்சியும் தேசியப் பிரச்சனையாக உருவெடுத்துள்ள இனப்பிரச்சனையை நீதியாகவும் நேர்மையாகவும் அணுகித் தீர்வு காணவேண்டிய கடமைக்குத் தம்மை அர்ப்பணிக்கவேண்டும். இனப்பிரச்சனையில் வெறும் வார்த்தைகளையோ அன்றிக் குறுகிய தேசிய இனக் கண்ணோட்டத்தையோ கொண்டிருக்கக்கூடாது என்பதையே கடந்த பத்தாண்டுகால கசப்பான அனுபவங்கள் நம் எல்லோருக்கும் பாடமாகத் தெரிவிக்கின்றன. இன்று தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சனை என்ன என்பதனை முழுமையாக புரிந்துகொள்ளாமை பிரதான குறைபாடாக அமைந்துள்ளதை இவ்வேளை நாம் சுட்டிக்காட்டுகின்றோம்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனை என்ன?

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வளம்மிக்க விவசாய நிலங்களும், குடியிருப்புக்காணிகளும், நீர்ப்பாசனக் குளங்களும் திட்டமிட்ட குடியேற்றங்கள் வாயிலாகப் பறிக்கப்படுவது தொடர்பாகவே அடிப்படை முரண்பாடு வெளிப்படத் தொடங்கியது. கல்லோயாக் குடியேற்றம் தொடக்கம் கென்பாம் - டொலர்பாம் குடியேற்றங்கள் வரையான பல்வேறு குடியேற்றங்கள் திட்டமிட்ட முறையில் நிறுவப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் பேசும் மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வந்துள்ளனர். இரு இன மக்கள் மத்தியில் இன உணர்வுகள் வலிமையடைந்து இனவெறுப்பாகி அவை இனமோதல்களாக வெடிப்பதற்கு திட்டமிட்ட குடியேற்றங்கள் ஒரு பிரதான காரணியாக அமைந்தது. அத்துடன், கூடவே மொழி, பொருளாதாரம், பண்பாடு, ஆகியவற்றின் விருத்திக்கு தடைகள் இருப்பதையும் உயர்கல்வி, வேலைவாய்ப்பு என்பனவற்றில் பாரபட்சம் காட்டப்படுவதையும் தமிழ் மக்கள் எதிர்த்து வந்துள்ளமையும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியவையாகும். இவையாவும் குடியேற்றத்திற்கு எதிரான போராட்டத்துடன் இணைந்தே வளர்ந்தன.

www.tamilarangam.net



1977 ஆம் ஆண்டைத் தொடர்ந்து இனப்பிரச்சினை இராணுவ அடக்குமுறை வடிவத்தைப் பெறவும், அது திட்டமிட்டமுறையே நீடிக்கிற இராணுவ உதவிகொண்டு பலவந்தமாகத் திணிக்கவும் இன ஒடுக்குமுறைக்கு எதிரான ஆயுதப் போராட்டம் மேலும் வலிமை பெற்று மக்கள் ஆதரவைப் பெற்றன. இத்தகைய சூழலிலும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசு ஒர் இணக்கமான அரசியல் தீர்வுக்கு வரத் தவறியதன் வாயிலாக இந்தியத் தலையீட்டுக்கு வழிகோலியது. இந்திய அமைதிகாக்கும் படை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைகொள்ளச் செய்து இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்று இந்திய அமைதிகாக்கும் படை திரும்பிச் செல்ல வேண்டும் என்ற ஏகோபித்த குரல் ஒலிக்கின்றது. அதேவேளை இந்தியப்படைகள் திரும்பிச் சென்றபின் தமது பாரம்பரியபிரதேசத்தில் தொடர்ந்தும் திட்டமிட்ட குடியேற்றங்களும், இன ரீதியிலான இராணுவ நடவடிக்கைகளும் பாரிய ஆபத்தை ஏற்படுத்திவிடப் போகின்றன என்ற உண்மையான பயம் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடமும் வடக்கு மாகாண எல்லைப்புற மக்களிடமும் உருவாகியுள்ளது.

இத்தகைய அச்சத்தை அல்லது ஐயப்பாட்டை முற்றுமுழுதாகத் தமிழ் மக்களிடமிருந்து அகற்றுவதற்கான நம்பிக்கையை அரசும் சிங்களத் தலைவர்களும் தமிழ்மக்களுக்கு வழங்கக்கூடிய [illegible] வேண்டும். இதுவரை உருவாக்கப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களில் தமிழ் மக்களின் தேசிய இன வளர்ச்சியைத் தடைசெய்வதாக உள்ள குடியேற்றங்களை அகற்றுவதோடு, இத்தகைய அத்துமீறிய குடியேற்றங்கள் எதுவும் இடம்பெறாமல் தடுப்பதற்கும் நடைமுறைசார்ந்த உறுதிப்பாடு இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் பாதையில் ஒரு பிரதான அம்சமாக விளங்கும் என நாம் நம்புகின்றோம். இதுவே இந்தியப் படைகள் முழுமையாக வெளியேறவும் ஒரு வழியாக அமையும் என்றும் திடமாக நம்ப முடியும்.

<u>எமது நாட்டின் வெளியுறவுக் கொள்கையும்</u>

<u>இலங்கை - இந்திய ஒப்பந்தமும்</u>

இந்தியா பற்றிய எமது அபிப்பிராயம் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை நாம் பல தடவைகள் வெளிப்படுத்தி வந்துள்ளோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியா சுதந்திரமான, பலம்பொருந்திய, தேசிய பொருளாதாரத்தைக்கொண்ட, சுபீட்சமிக்க, ஜனநாயக நாடாக இருப்பதை நாம் விரும்புகின்றோம். பிராந்திய அமைதிக்கும், உலக சமாதானத்திற்கும் இது உதவியானது. ஆனால் இன்றைய இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை நெறிமுறை பிராந்திய நாடுகள் அச்சமும் அவநம்பிக்கையும் கொள்ளத்தக்கவகையில் வகுக்கப்படுவதுபோல் அயல்நாடுகளாலும் எமது நாட்டு மக்களாலும் பலமாக உணரப்படுகின்றது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இந்திய அமைதிகாக்கும் படை இங்கு பிரவேசித்த போது, நாடுகளுக்கிடையில் சமத்துவமற்றதும், சர்வதேசப் பொதுக் கோட்பாடுகளில் விட்டுக் கொடுப்பதும் ஒரு புதிய தன்மை முன்மாதிரியாக அமைந்துவிடக்கூடிய ஆபத்து உண்டு என்ற கருத்தை நாம் உறுதியாகத் தெரிவித்திருந்தோம். இந்திய அரசு இத்தகைய வெளியுறவுக் கொள்கையைத் தவிர்த்து பிராந்திய-அயல் நாடுகளின் நம்பிக்கை கொள்ளத்தக்க சரியான வெளியுறவுக்கொள்கையை வகுக்க நிர்ப்பந்திக்க இந்திய மக்கள் தமது அரசுக்கு உதவுவார்கள் என நம்பமுடியும்.

அதே வேளை, 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு இலங்கை பின்பற்றி வந்த அணிசேரா நடுநிலை வெளியுறவுக் கொள்கையில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசு பலமான மாற்றங்களை செய்து மேற்குலகு சார்பான செயற்பாடுகளில் கண்மூடித்தனமாக ஈடுபட்டதையும் புரிந்துகொண்டு, அத்தவறைத் திருத்தி சரியான நிலைக்கு மீள்வதும் அவசியமாகவுள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தமானது சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாது இரு அரசுகள் மட்டுமே செய்துகொண்ட ஒரு ஒப்பந்தமாக அமைந்ததால் அது முழுமையற்றதாகவும், நடைமுறைச் சிக்கல்களுடையதாகவும் அமைந்தது. அதனால் பிரச்சினைகள் தீர்க்கப்படாததோடு புதிய பல நெருக்கடிகளுக்கும் வழிவிடக் காரணமாய் அமைந்தது.

இனப்பிரச்சினைக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால் உரிய தீர்வு கிட்டவில்லை. ஆயினும் அந்த ஒப்பந்தத்தில் காணப்படும் சில சாதகமான அம்சங்களை ஒரு தொடக்கமாகக் கொண்டு விரிவான அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணப்படல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வேண்டும். எமது கட்சி ~~[illegible]~~ இனப்பிரச்சினையின் இடைக்காலத் தீர்வுக்கான யோசனைகளை 21.12.86 இல் தெளிவாக முன்வைத்துள்ளது. அதாவது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை அவர்களே நிர்வகித்து அபிவிருத்தி செய்யும் வகையிலான பிரதேசசுயாட்சிக்கான அதிகாரங்களை பரவலாக்கி மாகாணசபை என்ற பெயரிலோ அன்றி வேறு பெயரிலோ சுயாட்சி அமைப்புகளை உருவாக்க வேண்டும். அதேவேளை வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கும், வெளியே வாழும் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் ஏனைய பிரதேசங்களில் சிறுபான்மையினராகவுள்ள சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களின் தேவைகளுக்காகவும் சுயாட்சி உள்ளமைப்புக்கள் உருவாக்கப்படுவது அவசியமாகும். இவை இனப்பிரச்சினையின் தீர்வுடன் இணைந்தவையாங்கள் என்பதை எமது கட்சி மீண்டும் வலியுறுத்துகின்றது.

இப்போது சர்வகட்சி மாநாட்டின் இரண்டாவது அமர்வு இடம்பெறும் வேளை இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கிடையில் புதியதோர் அதிகாரிகள் மட்டத்திலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் ஏனைய சக்திகளுடன் விரிவாகக் கலந்துபேசி நிறைவு செய்யப்படாது இரு அரசுகள் மட்டுமே சம்பந்தப்பட்டதாயுள்ளது. இதனை பலதரப்பட்டவர்களும் ஒவ்வொரு வகையில் வியாக்கியானம் செய்யவும் புரிந்துகொள்ளவும் முயல்கின்றனர். ஆதலினாலேயே, இத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்த்து இலங்கை அரசு, இந்திய அரசு, தமிழ் இயக்கங்கள் — ஏனைய அரசியல் கட்சிகள் உள்ளிட்ட முத்தரப்புப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்குமாறு எமது கட்சி வலியுறுத்துகிறது. இன்றைய சர்வகட்சி மாநாடு இந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கான ஒரு களத்தை அமைக்கவும் அதனூடாக இவ் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைத் தோற்றுவித்துச் செல்லவும் இயலுமானால் எமது நாட்டிற்கு ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட களங்கத்தை இந்தியப்படையினர் வெளியேற்றத்துடன் தணித்துக்கொள்ள முடியுமென்றே நமது கட்சி நம்பிக்கை கொள்கிறது.

இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தை

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் திருப்திகரமான முறையில் சாத்தியமாகியுள்ளது என்ற இருதரப்பினரதும் வெளிப்படுத்தல்கள் ஏற்கத்தக்க நல்ல அம்சமாகும். அதேவேளை 87 ஜூலை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்பிருந்தே அனைத்து சக்திகளும் வலியுறுத்திவந்தது போல, நாம் வலியுறுத்தி வந்ததுபோல, மேற்படி பேச்சுவார்த்தை விரிவுபடுத்தப்பட்டு ஏனைய இயக்கங்கள் – கட்சிகளுடனான விரிவுபடுத்தப்பட்ட பேச்சுவார்த்தையாக பரிணமிக்கவேண்டும். அப்பேச்சுவார்த்தை, முன்புகூறியபடியான இந்திய அரசையும் சம்பந்தப்படுத்தும் முத்தரப்புப் பேச்சுவார்த்தை என்ற நிலைக்குச் செல்வதன் வாயிலாக வடக்கு கிழக்கில் அமைதி உறுதிப்படுத்தப்பட முடியும் என்றே நமது கட்சி கருதுகின்றது.

<u>இடைக்காலத் தேசிய அரசு</u>

நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வுகாண்பதற்கு ஐந்து எதிர்க்கட்சிகள் கூட்டாக முன்வைத்துள்ள அறிக்கையின் சில அம்சங்களில் எமக்கு கருத்து வேறுபாடு இருந்தபோதிலும், அதனை நாம் ஆதரிக்கிறோம்.

பொதுக்கோரிக்கையின் அடிப்படையில் சகலசக்திகளும் ஓர் இணக்கம் காண்பது அவசியமானதாகும். மிகவும் கடினமான இன்றைய நெருக்கடிமிக்க காலகட்டத்தில் ஒரு தேசிய அரசு உருவாக்கப்படுவது இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும், இறைமைக்கும், சுதந்திரத்திற்கும், நலனுக்கும் மிகமிக அவசியமானதாகும்.

நன்றி

[signature] 1/10/89

(கே. ஏ. சுப்பிரமணியம்)
பொதுச் செயலாளர்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது),
15/1 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
25. 9. 89.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்